சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ௵ (1889-ம் ஆனி ௴ 28-ந் உ.

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத் 94 ] யாழ்ப்பாணம்:- ருதிரோற்காரி ௵ ஆவணி - புரட்டாதி ௴ 23, 30-9-83 வெள்ளிக்கிழமை [இல -24

உடைந்துபோகும் உலகத்தை

# ஒன்றுசேர்க்க வாரீர்! மாநிலத்தீர்!!

## பொறாமையும் பொங்கியெழும் பொல்லாங்கும் போகட்டும்

### கடவுள் உண்டென்று கனவிலும் மறவா மக்கள் கருத்துவேற்றுமையால் விபரீதம் விளைவிக்கலாமா?

மேடையில் ஏறிநின்றதும் பேச்சாளர் என்ன பேசுகின்றார் - 'ஒன்றேகுலம் ஒருவனே தெய்வம்' என்று உதடு ஊறச் சொல்லி மகிழ்கின்றார். கேட்போர் கரந்தட்டி ஆரவாரஞ் செய்கின்றனர். இன்னொரு மேடையில் வேறொரு பிரசங்கியார் 'அன்பே சிவம்' என்று அழகாகத் தொடங்குகின்றார்; செவி மடுப்போர் ஆமோதித்துக் கோஷமிடுகின்றனர்.

வேறோர்மேடையில் நாவலர் விழா; எங்கள் நாவலரைப்போல முன்னும் இல்லைப் பின்னும் இலலை; சிலை எடுப்போம்; முத்திரை ஞாபகத்துக்கு வெளியிடுவிப்போம் என்று சண்டமாருதமாகச் சொல்லாடுகின்றார். பிறிதொரு சொற்பொழிவாளர் 'இன்றே செய்வோம் அதுவும் இன்னே செய்வோம்' என்கின்றார்; வானளாவக் குரல் எழுப்பும் கூட்டத்தினர்.

இந்த வகையில் பொன். இராமநாதனுக்குப் புகழாரம். அந்தத்திருக்குறளுக்கு இவை யாவற்றிலும் மேம்பாடான விழா - ஒரு நாளில் முடிவடையாது தொடர்ச்சியாக நிகழும் - உலகத்தில் எங்கும் காணலாம் இக் குறளை என்பார்கள். இந்த நூலில் இயலாத தொன்றில்லை என்பார்கள். தலையணைக்குக் கீழ் வைத்துக்கொள்ள வேண்டிய அருள் நூல் என்பார்கள்,

இவர்கள் எல்லோரும் தங்கள் வாழ்க்கையில் இந்த வேதாந்தத்தைக் கடைப் பிடித்திருந்தால் உலகம் உடைந்துவிடாதே.

---

## தீங்கு தாண்டவம் ஆடினுற் செய்வது என்ன?

ஒருவர் இருவர் அல்ல ஊர் முழுவதும்; ஊர் முழுவதும் மட்டும் அல்ல ஒரு பிரிவு முழுவதும் அதுமட்டுமல்லத் தேசம் முழுவதுமே தீங்குற்றால் இதனுல் என்ன பாடம் படிப்பிக்கப்படுகின்றது என்று நாம் நன்ருகச் சிந்திக்க வேண்டும்.

இராவண யுத்தம் பாரதப் பெரும்போர், சூரபத்மன் மகாபொருதல் இவற்றையெல்லாம் வரலாறுகள் மூலம் அறிந்திராதவர்கள் இல்லை; அவற்றிலே காணப்படுவனவற்றை இப்பொழுது எண்ணினுற் சுரர் அசுரர் என்ற வகையிலும் அன்பு நெறியாளர் — வன்முறையாளர் என்ற முறையிலும் நியாயம் அநியாயம் என்றவாறும் பொதுக்கலவரங்கள் விளைந்து பின் உண்மை புலப்படும் பாடம் எல்லோராலும் படிக்கப்படும். என்று நாம் உணர்வோம் அப்பொழுது தான் அமைதி நிலவும்-

தேவர்களே திக்கற்றத் திலைடந்து சிதறி ஓடி ஈற்றிலே சிவபெருமான் திருவடியில்வீழ்ந்து விமோசனத்தை வேண்டினர். வேண்டியதும் உலகம் உய்யும்பொருட்டு உதித்தனன் உமை மைந்தன். தீங்கிழைத்தவர்களும் விசுவரூபத்திலே விமலனைக் கண்டு தங்கள் தீவினைக்குப் பரிகாரம் தேடிக்கொண்டனர்.

எனவே இப்பொழுது மனமுடைந்து நிற்கும் மக்கள் இறைவனை நோக்கி நோன்பிருந்து "உலகம் உய்ய" ஒரு திருமகனை வரம் வேண்டியுபாசித்தால் விரதத்தின் புனிதத்துக்குத் தகத் திருவருள் பொலியும்- ——

---

### சிவஞான போதச் செம்பொருளைச் சிறந்த கத்திய ரூபமாக்கிய கவுணியப் பெருந்தகை

## சாம்பவஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் அவர்கள்

### தெய்வீக சேவையைச் சிந்திக்க வைக்கும் சிலை நாட்டப்பெற்றது

குப்பிளான் சைவ மகாசபையினரின் சமயவெழுச்சிப் பயனாக மெய்கண்ட சாத்திரச் செம்பொருள் வசனாலங்கார தீபம் என்னும் சிறந்த நூல் தந்த சாம்பவஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் அவர்கள் ஞாபகமாகச் சிலை நிறுவப்பெற்றது சென்ற ஆவணித் திங்களில்,

சிலை மயத்திறந்துவைத்த சிவப்பிராமணச்செம்மல் பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் 'இந்நாடு மறக்கமுடியாத ஒருவரை மறந்துவிட்டதென்று பெருங் கவலை கொண்டனர். அந்த வழுவை மாற்றக் குப்பிளான் சைவ மகாசபையார் தங்கள் ஊர்ப் பிறந்த குரவரை மறவாதவாறு சிலை எழுப்பி ஞாபகஞ்செய்வது சிறப்பினும் சிறப்பென்றனர்.

மகாசபைத் தலைவர் சட்டத்தரணி க. வைரவநாதன் இயற்றமிழ் இசைத்தமிழ் அபிமானி இந்தப் பெருமுயற்சிக்கு அருந்துணை புரிந்து அரியதொண்டு நிகழ ஆவன செய்தனர்.

இளஞ் சைவப்பிரசாரகர் திரு. சிவ. மகாலிங்கம் ஆசிரியர் செயலாளராகத் திறம்படக் கருமங்களை இயக்கி எடுத்த பணியை முடிக்கவுழைத்தனர்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேராசிரியர் கலாநிதி வை. கோபாலகிருஷ்ணன் விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி, இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம் உட்படப் பலர் ஆசியுரை சிறப்புரை வழங்கி மகிழ்வித்தனர். மகாசபைப் பிரசார அமைப்பாளர் திரு. கா. கணேசலிங்கம் நன்றியுரை நவின்றனர்.

காசிவாசி ஞானியின் வசனாலங்கார தீபத்துக்குச் சிறப்புப் பாயிரம் வரைந்த ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் (திருக்கைலாச பரம்பரைத்

[ வளர்ச்சி 2 ஆம் பக்கம் ]

---

### தொல் இலக்கணம் சுவைக்க வைத்த செந்தமிழ்த் தொண்டர்

### சி. வை. தாமோதரனுரைச் சிந்திக்க முத்திரை

சென்ற ஆண்டிலே தொல்காப்பியத்தொண்டர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் ஞாபகமாக வெளியிடத் திட்டமிடப்பட்ட முத்திரை அப்பொழுது வெளிவா முடியாது போனது. இவ்வாண்டிலே மறுபடியும் வெயீட்டுச் சபையாரின் முயற்சியினுல் நிகழ்ச்சி நிறைவேறியது. அஞ்சற்றிணைக்களத்ததிகாரிகளுடன் வடமாநில அரச அதிபரும் அபிவிருத்திச்சபை முன்னாள் முதல்வர் திரு. சு. நடராசாவும இன்னும் பல அபிமானிகளும் இந்த முக்கிய வைபவத்திற் கலந்துகொண்டனர்.

முத்திரையை வெளியிட்டுவிட்டால் தமிழ் அபிமான முன்னேற்றம் எழுந்துவிடமாட்டாது. சம்பிரதாயச் சடங்குகள் நினைவில் நின்று நிலவமாட்டா.

தாமோதரனுரை நினைப்பதென்ருல் அவர் வெளியிட்ட தொல்காப்பியத்தையோ வேறு பல நற்றமிழ் நூல்களைப் படிப்பதும் அந்நூற்பொருளை வாழ்க்கையில் அமைப்பதுமே தூயவழி.

இலக்கியத்திலே திருக்குறள் எப்படியோ அப்படியே இலக்கணத்திலே தொல்காப்பியம் வாழ்க்கை

வளர்ச்சி 3ஆம் பக்கம்

---

### ஐப்பசித் திங்களில் அமையும்

## குருபூசை நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| திருமூலர் ஐப்பசி | 5 | 22-10-1983 |
| நெடுமாறர் | 6 | 23, |
| இடங்கழியார் | 7 | 24, |
| சத்தினர் | 12 | 29, |
| மெய்கண்டதேவர் | 18 | 3-11-83 |
| பூசலார் | 20 | 6. |
| ஐயடிகள் காடவர் கோனர் | 22 | 8, |

மெய்கண்ட தேவர் சிறப்புப் பற்றிக் காசிவாசி செந்திநாத ஐயர் எழுதிய கருத்து இவ்விதழில் வெளியாகின்றது;

திருமூலர் செந்தமிழாம் திருமந்திரம் பற்றிய உரையும் இவ்விதழிலிலே தொடங்குகின்றது.

உ
திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

ருதிரோத்காரி ஆ புரட்டாதி மீ 23, 30-09-83 வெள்ளி

இந்துசாதனம்

## உரைத்த கருத்தின்படி ஒழுகி வழிகாட்டியவர்

சொன்ன வண்ணம் செயற்பட்டுத் தூயவாழ்க்கை நடத்தி மனித குலம் அனைத்துக்கும் புனிதநெறி வகுத்தவர் ஒருவர் இருந்தார். உத்தம புருடன் என்று உலகம் உவந்தேற்று வாழ்க மகாத்மாவென மனம் மகிழ்ந்து வாயாரப் புகழ்ந்தது. அந்த மகான் இன்று இல்லை. அவர் மறைந்து முப்பத்தைந்து ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. எனினும் இந்த ஏந்தலின் நாமத்தை எடுத்து அடிக்கடி நினைவாஞ்சலி நிகழ்த்துகின்றதுலகம். அவ்வளவில் அந் நிகழ்ச்சி மறைந்தவர் சிறந்தவர் என்பதை மட்டும் மக்கள் மறவாதிருக்கின்ற தன்மையையே காட்டுகின்றது.

காந்தி ஏந்தல் காட்டிய வாழ்க்கை நெறியை மறந்து வரும் மனித சமுதாயம் அன்னாரின் அருமருந்தன்ன பெருமையை மட்டும் எடுத்துரைத்து விழாக் காண்பதிற் பயன் என்ன பலிக்குமோ யாமறியோம்.

இன்று உலகத்தில் இடுக்கணும் இடும்பையும் பெருகி வருகின்ற அவல நிலையில் காந்தியடிகளைப்பற்றி எண்ணும்பொழுது அன்னார் காட்டிய அறநெறியின் இன்றியமையாமையை நாங்கள் உணருவோமேயானால் உணர்ந்து செயற்படுவோமேயானால் ஒருவாறு உய்ய முடியும்.

'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற பொருள் விரித்த திருவள்ளுவ நாயனார் அதைத் தொடர்ந்து சிற்றினஞ் சேராமை என்னும் கருத்தைத் தொடுத்தமை காண்க.

சிற்றினம்தான் யாதோ எனின் பரிமேலழகர் 'நல்ல தன் நலனும் தீயதன் தீமையும் இலவெனப் போரும் விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு'' என்று விளக்கியிருக்கின்றனர்.

பெரியவர் காந்தி பிறந்த தினம் பேணும்பொழுது பெரியாரைத் துணைக்கோடுகின்றோம். ஆகவே சிற்றினஞ் சேராமை அந் நினைவுடன் நிறைந்த பண்பாக வேண்டும் அல்லவா?

அரியவற்றுள் எல்லாம்
அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்
அவ்வாறு கொண்டபின்,
சிற்றினம் அஞ்சும் பெருமை
சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்துவிடும்
என்ற உண்மை புலனாகும்.

# சைவமாம் சமயம் சாரும் சால்புடையவர்கள் யார் ?

## நாவலர்பெருமான் தரும் நல்விளக்கம்

திருத்தொண்டர் பெரிய புராணம் செந்தமிழ்வசன நடையில் யாவரும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் விளங்க நாவலர் நற்றகையார் அன்று தொண்டாற்றினர்.

அவ் வெளியீட்டின் முகவுரையிலே :—

.......... பஞ்சமாபாதகங்கள் செய்யாதவர்களாய் 'இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையவர்களாய்....... சிவதீக்ஷை பெற்றுக்கொண்டவர்களாய் விபூதி ருத்திராக்ஷ தாரணம், சந்தியாவந்தனம், ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபம், சிவத்தியானம், சிவாலய சேவை, சிவலிங்க பூசை, குருவாக்கிய பரிபாலனம், மாகேசுர பூசை முதலியனவற்றைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர்களென்று சொல்லப்படுவார்கள்.

அந்தச் சைவர்கள் ஓதி உணர்தற்கு அத்தியாவசியகமாய் இருக்கும் நூல்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் பெரியபுராணம் என்பவைகளாம்''

இவ்வாறு தொடர்கிற திருத்தொண்டர் பெரிய புராணத்தை ஆற்றொழுக்குப்போன்ற சீரிய செந்தமிழ் நடையில் ஒரு வசனநூலாக்கினார் நாவலர்ஐயா. பதினெட்டுப் பதிப்புகள் இதுவரை நிகழ்ந்தன. பத்தொன்பதாம் பதிப்பை வெளியிடும் பாக்கியம் தெல்லிநகர் துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கு எய்தியது. சைவ பரிபாலன சபையின் சமயத் தொண்டுக்குத் துணையாக இத்தேவஸ்தானம் அயராது உழைத்துவரும் பெருந்தொண்டினால் நல்லாற்றல் பெற்று வருகின்றதென்பதற்கோர் சான்றாகவுள்ளது இந்தப் புண்ணிய கைங்கரியம்.

இந்தப் புதுப் பதிப்பு வெளியீடு ஐப்பசித் திங்கள் 8ம்நாள் செவ்வாய்க்கிழமை ( 25-10 1983 ) முற்பகல் 9 மணிக்கு நிகழத் திருவருள்பொலிந்திருக்கின்றது.

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் இவ் வெளியீட்டினை அறிமுகப்படுத்திச் சொற்பொழிவாற்றுவர்.

முன்னாள் வித்தியாதிகாரி திரு. அ. சரவணமுத்து அவர்கள் முதலாவது பிரதியைப் பெற்றுக்கொள்வர்.

விலை மதிப்பற்ற நாவலர் வெளியீட்டுக்குச் சம்பிரதாயமுறைப்படி விலை ரூபா முப்பத்தைந்தாக நிர்ணயிக்கப்பெற்றிருப்பினும் சமயிகள் எவ்வளவு பொன்னும் ஈந்து சைவ இலக்கிய பொக்கிஷத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

— —

மகாத்மாவை நினைப்பது பெரும் பேறு. அப்பேற்றினைப் பேணச் சிற்றினம் சேர்ந்திருப்பதே அருங் கடமையாகும்.

•••○•••

சாந்தையர்மடம்

## சைவசமய அபிவிருத்திக் கழகம்

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் நிர்வாக சபைக் கூட்டம் 11-9 83ல் வைத்திய கலாநிதி. கா. கனகரத்தினம் தலைமையிற் கூடியது. பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 21 -11- 83ல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை வழமை போல் சிறப்பாக கொண்டாடுவது. அதன் சார்பாக பின்வரும் போட்டிகளை நடாத்துவது

1 முதலாம் இரண்டாம் சைவ வினா விடைப் பரீட்சை

2 நாவலர் பற்றி கட்டுரைப் பேட்டி

விபரங்கள் தேவைப்படுவோர் கழகத்துடன் தொடர்பு கொண்டு அறியலாம். —

## திருமூலர் சிவஞானம்

யாவர்க்கு மாம்இறை
வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாப உண்ணும்
போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க்
கின்னுரை தானே

அறஞ்செய விரும்பு என்ற அறிவுரையைத் திருத் ஒருங்கிணை மந்திரத்துண்மையறியமாட்டோமா!

அற்றுநின் றுருண்ணும்
ஊணே அறனெனறும்
கற்றன பதம்
கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றுங்கொரு
கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும்
பயன்அறி யாரே

மானிடருக்கு ஞானியின் நல்வாக்குக் கேட்டீர்களா?

ஒன்றும் அற்று கதியில்லாது கவலைப்படுவோரை உண்ண வைத்தலே தருமம் என்கின்றாரே

அகதிகளை நினைக்கின்றீர்களா அவர்களை உண்ண வைக்கின்றீர்களா

அழுக்கினை ஓட்டி
அறிவை நிறையீர்
நழுக்கிய நாளில்
தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தெசெய்வீர்
வெம்மை பரந்து
இழுக்கவன் றென்செய்வீர்
ஏழைநெஞ் சீரே

உள்ளபோதே ஈகை ஒப்பாதிருக்கும் அறியாமைதான் என்னேயோ!

— —

# நூல் நயம் நுவலல்

## பண்ணிசை வரலாற்றுத் தத்துவம்

ஆக்கியவர் :
பண்ணிசைமணி க. சிவபாலன்

பெறுமிடம் : பிரபல புத்தக விற்பனை நிலையங்கள்,
'இந்துசாதனம்', வண்ணை, யாழ்ப்பாணம்.

திருமுறைப்பணியாகப் பண்ணிசைப் பாராயணம் செய்து ஆலயங்கள் தோறும் அடியார்களை அகமகிழ வைப்பது மட்டு மல்லாது அப்பண்ணிசையின் தத்துவத்தையும் அறிந்து அறிந்ததனை ஏனைய அன்பர்களும் அறியவைக்கும் தொண்டினைச் சிறப்பாகக் கொண்டிருக்கின்றனர் பண்ணிசைமணி சிவபாலன் அவர்கள் காஞ்சிப் பெரியவர் மூலாக மகரிஷி சுத்தானந்த பாரதியார், திருமுருக கிருபானந்த வாரியார் குன்றக்குடி அடிகளார் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களும் இவ் வெளியீட்டுக்கு வேண்டியவாறு ஆசி வழங்கியிருக்கின்றனர் என்றால் உலகுக்கு உதவும் பான்மையில் உள்ளது இது என்பது புலனாகும்

இசைத்தமிழ் எம் மொழிக்கும் எம் இனத்துக்கும் எம் மதத்துக்கும் இன்றியமையாத எழில் அணி என்பதை அறிஞர்கள் தங்கள் நூல்களிலே நன்கு விளக்கியிருக்கின்றனர் பண் என்றது சைவப் பண்பில் அமைகின்றது. இலக்கியத்துக்கு இலக்கணம் எடுத்துரைத்த மேதை தொல்காப்பியனார் நரம்பின்மறை என்று விதந்து கூறி யாழுக்குரிய பொருத்தத்தையும் காட்டியிருக்கின்றனர்

பண் என்றவுடன் எங்கள் மனத்திலே பதியும் திருநாமங்கள் திருமுறை தந்த திருத்தொண்டர்களின் திருப்பெயர்களே. இவற்றுள்ளே பிறக்கும் பொழுதே பண்ணிசைச் சிறப்புடன் தோன்றிய தோணிபுரத் தெய்வத்தின் அடியார் திருஞானசம்பந்தரின் எண்ணமே தோன்றும்

பண்ணிசைமணி இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு நன்கு இசை வேட்கையை இலக்கியப் பரப்பிலே ஆய்வுக்குப் பயன்படுத்தி ஏழிசைகளைப்பற்றி எல்லா வகையிலும் நுணுகி அணுகி அரிய பண் வரலாற்றினை உருவாக்கியிருக்கின்றனர்

ஆசிரியர் எடுத்துக் கொண்ட பணியைப் பரவைத்த திருமுறைகளையும் திருமுறைத் திருத்தொண்டர்களையும் கூர்ந்து நோக்கிக் குறிப்புக் கூறியதுடன் பண வகுப்பினை விசேடமாக விளக்கியுள்ளனர் சங்க காலத்து நிலப்பண்பினை அமைத்துப் பண்ணின் தத்துவத்தையும ஆசிரியர் காட்டுவதும் அன்னாரின் கூரிய மதித்திறனைக் கூட்டுகின்றது

நல்ல அமைப்பு, நல்ல முயற்சி, நல்ல பயன் தரவல்லது; எல்லோருக்கும் ஏற்றது இந்த வெளியீடு.

சைவ அன்பர்கள் பெற்றுப் பயன் உறுவார்களாக.

---

## சிவஞானபோதச் செம்பொருளை

[ 1ம் பக்கத் தொடர்ச்சி ]

தருமபுரவாதீனத்திலே காஷாயம் பெற்றுத் துறவு பூண்ட செம்மனச் செல்வர் - வைத்தீஸ்வரன்கோயிற் றருமகர்த்தா ) பத்திச் ரூபமாகப் பகன்றது.

நிறைகல்வி தவமொழுக்கஞ் சான்றாண்மை
கண்ணோட்ட நெடுகு மன்பு
பொறைமேன்மைக் குலஞ்ஞான முதிர்ச்சியநு
பூதிமுதற் குணங்க ளெல்லாம்
குறையாமற் கொண்ட செந்தி நாதமறை
யோய் நின்னைக் குறித்தியா மிட்ட
மறைவாய்மைச் சித்தாந்த சிகாமணியென்
பெயரெவர்க்கும் வழங்க லாமோ,

சிவஞான போத வசனாலங்கார தீபம் என்னும் சிறந்த சாத்திர கத்திய ரூபநூல் சைவசித்தாந்த சைவமகா சமாஜத்தின் வனிதை வகுப்புக் காரியதரிசியாயிருந்த ஏகாம்பர முதலியார். ஆண்டாளம்மையாரால் (மறுநாமம் மங்கையர்க்கரசி) சென்னை சைவ வித்தியானுபாலன யந்திரசாலையில் நள வருடம் சித்திரை மாதம் அச்சிடப் பெற்றது சைவசித்தாந்த மகா சமாஜத்தப் போதைய உப தலைவர் திரு. நல்லசுவாமிப்பிள்ளை உட்படப் பல அறிஞர்கள் சாற்றுரை எழுதியுள்ளனர்

வசனாலங்கார தீப பூமிகை என்ற மகுடத்திலே முதற் பன்னிரண்டு பக்கங்களில் நூலாசிரியர் எழுதிா அரிய பொருட் களஞ்சியத்தில் ஒருபகுதி அடுத்தடுத்து இந்துசாதன இதழ்களில் அநுவதிக்கப்படும்,

*

# நியம நடை நெறி

மனிதன் வாழப் பிறந்தவன். ஈசன் அருளால் இது நிகழ்கின்றது. இப் பிறவிக்கொரு இலட்சியம் உண்டு கன்ம வினையைக் கழித்து முத்தியின்பம் எய்துவதே அது.

வாழ்வாங்கு வாழ்ந்தால் இந்த இலட்சியத்தை அடையலாம். இவ்வாறு இலட்சியத்தை அடைந்தவர்களையே நாங்கள் எங்கள் குருவாகக்கொண்டு அவர்களின் அமுத வாக்குகளை வேத வாக்கியமாகக் கணித்து அப் போதனைகளின் படி வாழப் பழகவேண்டும்.

அரிதினும் அரிதான மானுடப் பிறப்பைப்பெற்றோமே என்று அப் பேற்றினை எங்களுக்குத் தந்த இறைவனை மறவாது நன்றியுள்ளவர்களாக வாழ்தல் எங்கள் கடமை.

இந்த விதமான வாழ்க்கைக்கு ஒரு ஒழுக்கநெறிக் கோவையைப் பின்பற்றுதல் உத்தமம். நியமமாக என்ன நாம் இயற்றுதல் வேண்டும் என்பதற்குரிய நடைமுறை நெறியை ஆன்றோர் அமைத்திருக்கின்றனர்.

சூரியன் எங்கள் கண்களுக்குத் தோன்றும் நேரம் விசேடமானது. பொழுது புலர்ந்தது என்று புகட்டும் ஆதித்தனைச் சிவ சூரியன் என்றே அறிஞர்கள் அழைப்பார்கள். இது இயற்கையோடு இணைந்த நிகழ்ச்சி. எல்லா உயிரினமும் இராக்காலத்திலே துயில் கொள்கின்றன. விடியற்பொழுதில் விழித்துவிடுகின்றன. இந்த நிகழ்ச்சியைப் புள்ளினம் ஆனந்த ஆரவாரத்துடன் அறிவிக்கும்.

கூவின் கோழி கூவின பூங்குயில் என்றார் மாணிக்கவாசக சுவாமிகள். இறைவனும் இனிய துயில்கொள் பவன்போலப் பாவனை பண்ணி எம் பெருமானை எழுப்பும் பாங்கினிலே திருவாதவூரடிகள் பல உண்மைகள் பொதிந்த திருப்பள்ளி எழுச்சி என்னும் அருட் பதிகத்தைத் திருவாய் மலர்ந்தனர்.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின
இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்
தொருப்படு கின்றது
விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல்
தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே
யாவரும் அறிவரியா
யெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி
எழுந்தரு ளாயே.

ஆநந்த அழைப்பு!

இந்த அரிய காட்சியைச் சிவ சூரியனோடிணைத்து மேலும் திருவாசகனார் இயற்கையை விரித்து விளக்குகின்றார்.

உதயமலையொன்றுண்டு என்று கற்பனை செய்து இதயம் பூரிக்க என்ன சொல்கின்றார்.

அம் மலை உச்சியினின்றும் உலகுக்குக் கண்ணாகிய கருணைக் கதிரவன் எழுதலும் எழுதலும் இயற்கை எவ்வாறு இயங்குகின்றது. தாமரை முதலாம் பூக்கள் மலரத் தொடங்குகின்றன. மலர்விரிந்தால் வந்துவிடும் வண்டினம். இத்துடன் இருளும் இல்லாது போய் விடுகின்றது.

நியமத்துக்கு நேர விதி வகுத்தாற் போன்றது இந் நிகழ்ச்சி, அடியவர்களும் கண் விழித்துவிடுகின்றனர். காலைக் கடன் முடித்தும் களிப்படைந்து சங்க நாதம் செய்கின்றனர்.

அவனி முழுவதற்கும் அறிவித்தல் கொடுபடுகின்றது. இத்துடன் நாள் என்னும் காலப்பிரிவு தொடங்குகின்றது.

பொழுது புலர்ந்தது என்னும் பொழுது விடியற்காலை என்பது விளங்கும். யாமங்கள் நான்குகொண்டது இரவு என்பர் வடமொழி நூலர். தமிழ்இலக்கியத்தில பொழுது ஆறும். முற்பகல், நடுப்பகல், பிற்பகல், முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு; இராப்பொழுது, மாலை, யாமம் வைகறை எனப் பிரிவுகளுண்டு.

வைகறை – விடியற்பொழுது – சூரியோதயம்.

கோவில்களுக்குரிய பொழுதும் ஆறும். பூசாகாலம் உஷாகாலம்; காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாங்காலம் அர்த்த சாமம் என்பன.

வைகறைப் பொழுதில் உஷாக்காலம் நிகழ்வதாகையால் விடியுமுன் எழுந்திருத்தல் வேண்டப்படுகின்றது. பூசா காலம் அதற்கு முன் நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

இதுகாறும் பொழுது என்ற காலவரையறை விரித்துரைக்கப்பட்டமை விடியற் காலத்தில் விசேடத்தை விளங்க வைக்கவும் மக்களின் வாழ்க்கை இந்த ஆறு காலப் பிரிவின் படி அமையுமென்பதைக் காட்டவுமே;

இயற்கையின் நியமமாக மக்கள் விடியுமுன் நித்திரை விட்டெழுதல்வேண்டும். உள்ளமும் உடம்பும் ஓங்கும். திருவருள் திகழும். நீடுழிவாழலாம். நிமலனடி அடைய நெறிப்படுத்தும்.

இந்நெறி இனி, விழித்தும் யாம் என்ன செய்தல் வேண்டும்?

எண்ணம் ஈசனிடத்திலும் எங்கள் வலக் கைவிரல்கள் திருநீற்றுமடலினும் சார்ந்து அந்தப் பாக்கியப் பொருளை நெற்றியிலே சிவ சிவ என்றணிந்துகொண்டு திருவுருவப்படத்தைப் பார்த்துப் பின் அண்மையிலிருக்கும் ஆலயத்தை நோக்கி ஆநந்த உணர்ச்சியுடன் இருளும் மருளும் மறைய ஒளியும் அருளும் முன்னாக அன்றைய நாளை நியமப்படி ஆரம்பிப்போம் இது சைவ சமயியின் நியமம்.

## — சைவாகமங்கள் —

[திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம்]

(முன் வளர்ச்சி 2)

இருக்கு வேதத்தில் சிவன் ஒரு தெய்வமாகக் கணிக்கப்படவில்லை. பின்வந்த வேதங்களில் உருத்திரன் சிவனாக மதிக்கப்படுகிறார். நாட்டு மக்கள் வழிபட்ட தெய்வங்களையும் வேத காலத் தெய்வங்களோடு இணைத்தும் அவர்களுடைய தத்துவக் கொள்கைகள் அனைத்துமே தற்கால இந்து சமயம் ஒற்றுமைப் பாட்டை கண்டுள்ளது. ஆனால் சைவாகமம் கூறும் பரமசிவம் முத்தொழில்கள் புரியும் மும் மூர்த்திகளுக்கும் மேற் பட்டவர். முழுமையாகப் புலப்படாத சிவத்தின் திருவுருவாகிய இலிங்கம் எத்தகைய தோற்றமுடையது. மேனாட்டு விற்பன்னர்கள் அது ஆண்குறியின் வடிவமே யென்று மதிக்கின்றனர். போர்க்களத்திலே விழுப்புண் பெற்று மாண்ட வீரனுக்கு நடுகல் அல்லது வீரக்கல் எடுக்கப் பட்டு வழிபடப்பட்டதாகச் சங்க விலக்கியம் கூறும். நடுகல்லின் வடிவத்திற்கும் இலிங்க வடிவிற்கும் ஒற்றுமை உண்டா?

சைவத்தின் முக்கிய சிறப்பியல்புகளையும் அவை வழக்கத்திலிருந்த நாடுகளின் வரலாற்றுப் பின்னணிகளையும் ஒழுங்காக ஆராய்ந்தால், சைவம் முதன்முதல் செழிப்புற்றவிடங்களை ஓரளவு, சுட்டிக் காட்டலாம் சைவாகமங்களின் நோக்கில் ஐந்து திருமுகங்களை உள்ளடக்கிய சதாசிவ மூர்த்தமாகிய இலிங்கத்தை மையமாகக் கொண்டே சைவக் கோவில்களின் வழிபாடுகளும், விழாக்களும் தோன்றியுள்ளன. அண்மைக்காலத்தில் மொகஞ்சதாரோ என்ற விடத்தில் நடைபெற்ற புதைபொருளராய்ச்சியில் இலிங்கங்களும் பசுபதியோடுஒருபுடை ஒப்புமையுள்ள பசுக்களாற் சூழப் பெற்றயோகியின் வடிவம் பொறித்துள்ள முத்திரைகளும் கண்டெடுக்கப் பெற்றன. ஆரியர் இந்தியாவிற்குள் வரமுன்பே இங்கு வாழ்ந்த மக்களின் சமயச் சின்னங்களென்றே ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இந்துநாகரிகத்தின் காலம் கி. மு. 500 – கி. மு 1500 இற்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாமென்று ஆராய்வாளர் மதிக்கின்றனர். இங்கு தாயைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் இருந்ததென்பதற்கு போதிய சான்றுகள் உண்டு. வேதத்தில் இலிங்கமோ பவானியோ வழிபடப்படவில்லை. உஷாவைத் தவிர வேறு பெண்தெய்வங்கள் வழிபடப் பட்டனவாக காணப்படவில்லை. மொகஞ்சதரோவில் கண்டெடுக்கப்பட்ட இலிங்கம் தாய்வடிவமான தெய்வம் ஆகியவற்றிற்கும் ஆகமத்திலுள்ள இலிங்கம் பவானி ஆகியவற்றிற்கும் ஒருபுடை ஒப்புமையுண்டென்பது ஒரே வழிப் புலனாகின்றது. இருக்கு வேதத்திற் காணப்படும் தெய்வங்கள் பெரும் பாலும் எதுவித குடும்பவமைப்புத் தொடர்பின்றித் தனிப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். ஆகம காலத்துச் சமுதாயத்திற் பல மக்கட் பிரிவினர் தமக்கிசைந்த ஒவ்வொரு தெய்வங்களை வணங்கியிருக்கலாம். ஆகமம் அத்தெய்வங்களை ஒரு குடும்பவமைப்பில் இணைத்துநடைமுறைச் சமயத்திலும் சமுதாயத்திலும் ஒற்றுமையை நிலைநாட்டியிருக்கலாம். குடும்ப அமைப்பு சமயத்தில் இடம் பெறவே இல் வாழ்வும் தெய்வத்தன்மை உடையதாகி வாழத்தகுந்ததாகிறது.

சிவமயம்

## சைவ பரிபாலன சபை

### சமயபாடப் பரீட்சை - 1983

சைவபரிபாலனசபை — யாழ்ப்பாணம். பரீட்சை, பாடப்புத்தகம் - நூலக உப சபைக்கூட்டம் சபைத் தலைவர் திரு. சி. இராசேந்திரம் அவர்கள் தலைமையில் 2-10-83 காலை 10 மணியளவில் நடைபெற்றது. திரு. ஆ. செல்லையா, Dr. V. யோகநாதன், திரு. வ. கந்தசாமி ஆகியோர் சமூகமளித்தனர். பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) இரண்டாம் தவணைக்காலத்தில் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வராமை காரணமாகச் சமயபாடப்பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பம் அனுப்பமுடியாத பாடசாலைகள் 30-10-83 வரை விண்ணப்பங்களை அனுப்பலாம்.

(2) முன்பு விண்ணப்பங்களை அனுப்பிய பாடசாலைகளும் வன்முறைச்செயல்களால் பாதிக்கப்பட்டு தமது பாடசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்யலாம்.

(3) சமயபாடப்பரீட்சை 4-12-83 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

(4) 27-11-83ல் நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழாவில் 1982க்குரிய அகில இலங்கை பரிசுகள் வழங்கப்படும்.

(5) 10, 9, 8 ம் வகுப்பு மாணவர்களுக்கு அகில இலங்கை ரீதியாக முதற் பரிசு தங்கப்பதக்கம் வழங்குவது போல ஏனைய வகுப்புகளுக்கும் முதற்பரிசு வழங்க வேண்டுமென்பது பற்றி பரிசிலனை செய்யவேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டது.

(6) இப்பரீட்சை செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிவரும் அதிபர்கள், ஆசிரியர்கள், பரீட்சகர்கள், சைவப்பெரியார்கள் யாவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துள்ளது.

(7) சித்தாந்தபண்டித பரீட்சைக்கு விண்ணப்ப இறுதி நாள் 15-11-83 ஆகும்.
பரீட்சை டிசம்பர் 23-12-83 — 31-12-83 வரை நடைபெறும்.

### தொல் இலக்கணம் சுவைக்க வைத்த

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழியை வகுத்துக் காட்டும் பான்மையது.

தமிழ்ச்சொல்புணர்ச்சிக்குத் தக்க நூல்களையே எம் முன்னோர் நாவலரும் தாமோதரனாரும் சிவபாதசுந்தரனாரும் செந்தில்நாதஐயரும் இன்னும் சிலரும் வெளியிட்டனர் முத்திரைபோடு முடித்துவிடக்கூடாது எடுத்த நன்முயற்சி.

### மழைப்பதிகம் ஓதல்

மழைப்பதிக பாராயணம் யாழ். நாயன்மார்கட்டு இராஜராசேஸ்வரி பேச்சியம்பாள் கோவிலில் 14-10-83 இல் வழிபாட்டுடன் நடைபெறும்,

### ஆயிரம் ஆயிரமாக அர்ச்சனை ஆற்றுங்கள்

அவலநிலை அப்படியே அகலும்

அப்பர், அடியார்கள் அனைவருக்கும் அரியதோர் அறிவுரை அளித்திருக்கின்றார். இக்காலத்தில் இவ்வேளையில் எவ்வளவு ஏற்றதாக இருக்கின்றது. — எண்ணி இயங்குவோமா!

திருச்சிற்றம்பலம்

பூவனூர்ப் புனிதன்
திருநாமந்தான்
நாவில் நூறநூ
றாயிரம் நண்ணினார்
பாவ மாயின
பாறிப் பறையவே
தேவர் கோவிலும்
செல்வார்க ளாவரே.

திருச்சிற்றம்பலம்

நமனையஞ்சோமென்று நவின்ற நாயனாரின் நன்மொழிகளை நாமேன் நயந்தவ்வழி நடக்கக்கூடாது!

எற்றுக்கும் நற்றுணையாவது நமச்சிவாயவே என்றவர் சொற்படி நடந்து அமரம் அடைப்போம்

HINDU ORGAN

Fri. 23, 30-9-83

## BIG POWRS IN BID FOR CHAMPIONSHIP

The common man, the ordinary citizen, in a state of utter helplessness and confusion puts this simple question to the august assembly that goes under the captivating description namely, the United Nations Organization "What are you doing? should not this drama stop now?"

If there is functioning an organization comprising of nations that are united and if such a movement has not gathered momentum in any appreciable degree towards making the world really united, is it not time that such a gathering dispersed leaving the members alone?

Looking at the political map of the geography of this earth, one finds that no-where in this world, this planet, can peace and harmony be said to prevail. The warfare that is going on both declared and undeclared could be said to have a third of the population of the entire world in the midst of misery that is being caused by violence. Another third must be living in the most uncomfortable conditions fearing involvement in the alarming affairs of other countries

Wedged in woefully between the Super Powers the third world, though not brought into line with either of the Big Two in the strictest sense yet aligned in the sly with particular ideologies must be in a state of suspense all the while.

Thus harmony is as far away from the huma race as the sun is from this planet.

Then what is the need for the drama entitled United Nations? The playwright of this peculiar stage is none other than the Big Power duo

Should the smaller nations be swept away while the champianship race is being run.

Why cannot these ad juncts of the Big Beings quietly withdraw from this suspicious scene and allow the contestants a straight fight for supremacy?

## OCTOBER 2 OF *Universal Import*

One hundred and fourteen years old date October 02 of 1869 — that was the historic day when there in the North Western part of the Indian Sub - Continent appeared the future apostle of Truth and Non-violence. Insignificant the occasion might have been just then. But the gifted child had soon blossomed into maturity sprouting to a height of spiritual growth that could have been possible only with soul - force as the nourishment.

Mahatma Gandhi has passed into international history as the Symbol of Satyagraha, the monument of moral magnificence, the emblem of integrity, and the portrait of patriotism in its purest form

There cannot be another Mahatma — a second Gandhi, for the standard of achievement of the or'ginal had been strangely rare.

Gandhism, the pet name given to all movements for redress or liberation cannot strictly be applied to the campaigns that have been organised after the departure of the diciplined leader.

We have taken pains to formulate this preamble before beginning to write on October 2 and what it should mean to humanity at this inicial juncture

Straightaway it can be stated unambiguously that in the present - day world teeming with hypocritical politicians, pseudo-patriots, and publicity hunters, Gandhian technique cannot be of any avail. Any pretender can easily be identified. For there is the acid test to be applied

DEDICATION TO TRUTH. DEVOTION TO DUTY. AFFIRMATION OF AHIMSA. CONTEMPTUOUS REJECTION OF CORRUPTION SPURNING OF SELF - INTEREST Can any one conscientiously stand this test?

Spurious coins must be distinguished from the genuine.

Remember October (2) and try to understand what it is to become A GANDHIAN. This bit of sincere service will be enough, certainly better than trying to pass for a Gandhian

# COMMUNICATION — IN A CONFUSED CONDITION

The direct development of the disabilities that have been caused by the July 1983 disturbances is the disorganization of the transport system of this country.

Refugees in their thousands are kept under very unfavourable conditions. Travelling by motor car is unthinkable as the fare for a mile works out at Rupees Fifteen or more. The omnibus service is also becoming hardly useful to the people. The van and the mini-bus, though available every fifteen minutes, carry potential danger with them either because of their own negligence and speed or by the indecent haste of competing vehicles.

The "gift parcels" by themselves cannot ease the mental agony of the refugees. If there be available some sure means of communication and transport the refugees can themselves easily undertake measures regarding their rehabilitation.

The "telephone" is almost dead. He who dares to dial in an emergency only deals with a dummy. Letters take their own holiday and cruise round before they reach the destination several days after

And the plight of the refugee who cannot help but endeavour to go to his original abode is terrible. At great expense he travels by road, the mini - bus accommodating him at its own terms, and finds himself posted at the other end unable to decide where to go and and how as he sees before him a place totally void of pleasantness

It is oft spoken that "peace councils" or Rehabilitation Units", "Social Service Societies" are there ready to respond to the call of the refugee. How many such organizations are there functioning properly. Have these establishments come into direct contact with the refugees.

This confusing state of misery must be resolved The first step will be to reorganize the 'Transport System' and the Communication Service (Telephone, Telegraph) Is there any such possibility?

## LORD GANESHA...

(continued from our last issue)

What about the grace of the Deity? Grace is received from the Deity when you are consistent in your worship, consistent in your discipline, consistent in your bhakti, your devotion. With such a foundation in your life, a great shakti, a force or power from Lord Ganesha, will come. Your mind will change. It will become clear and penetrating. You will say, 'I have been graced to see everything differently,' Doors will begin to open for you, and as you go through them your life will will become more full, more wonderful. And the grace of it is that it would not have ordinarily happened to you This is not a boon. A boon comes as the result of something that we ask for and get It is a very specific thing But grace comes because of the state of the soul in conjunction with its particular karma, because you have done everything right up to a certain point. The grace of the Deity then is not for a specific need or event in our life. It is a complete transformation - a metamorphosis. After that you can never be the same again, never look at life in the old way. By grace we are directed in spiritual life, pointed in the right directions, guided on the San Marga, the Straight path to God. Our thoughts are enlivened, our life is inspired with enthusiasm and energy, and we live daily in the joyous knowledge that everything is all right, everything is happening around us in accord with our karma, our dharma and God's gracious will.

Many people look at the Gods as mere symbols, representations of forces or mind areas. Actually, they are beings, and down through the ages ordinary men and women, great saints and sages, prophets and mystics in all cultures, have inwardly seen, heard and been profoundly influenced by these superconscious inner plane beings. Lord Ganesha is such a being He can think just as we can think He can see, and understand and make decisions — decisions so vast in their implications and complexity that we could never comprehend them with our human faculties of understanding. In recent history missionaries and others from the West have told the Indian people over and over that the Gods are not really beings, but merely symbols of spiritual matters, and unfortunately many have begun to believe in the Gods in this way. Among Hindus there are quiet a few who don't believe in Third World beings or Second World beings Their belief is restricted to beings of the First World and to a grand philosophy which is based solely on meditation, inner discipline and the Absolute Truth That is fine, but it is too high - minded for those living in the everyday world. It does not provide the practical spiritual necessities, such as devotion and temple worship, that lead the aspirant systematically to realization of the Absolute Parasivam, the Self God beyond the the mind through the grace of the personal Deity. For such a philosophy to become more than a mere philosophy, for it to become actual personal realization, is imperative that one live near and serve in a temple and under the direction of a SatGuru, a spiritual preceptor. In this way one avoids the many pitfalls of personal attempts at spiritual unfoldment.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K S. Road, Vannarponnai, Jaffna. (Telephone No. 22356) on Friday, 23, 30-9-83*

Editor in Chief: R. N. Sivapirakasam

